# வேலணை மத்தியகல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடாவின் பல்கலைக்கழக மாணவர்கள் உதவித் திட்டத்தின் 5வது ஆண்டு நிறைவு விழா





வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடாவில் 1995ம் ஆண்டு ஆவணி மாதம் 2ம் திகதி அங்குரார்ப்பணஞ் செய்யப்பட்டு ,ரண்டு தசாப்தங்களுக்கு மேலாக எமது பாடசாலைக்கும் தாயகத்தில் இன்னலுறும் எமது உடன்பிறப்புக்களுக்கும் ,யன்றவரை சிறப்பாகச் சேவையாற்றி வருகின்றது.

தற்போதய நிர்வாகத்தினராகிய நாம் எமது தாயக மக்களின் நீண்டகாலக் கல்விப் பாரம்பரியத்தை வலுப்படுத்தும் வகையில் எமது சங்கத்தின் செயற்பாடுகளை முன்னெடுத்து எமது ,ளைய சந்ததியினரின் கல்வி கலாச்சார முன்னேற்றத்தை இலக்காகக் கொண்டு மிகுந்த அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருவதன் மூலம் கனடாவில் ஓர் முன்மாதிரியான சங்கமாகத் திகழ்வது மட்டுமல்லாது பல அர்த்தமுள்ள செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இந்தவகையில் எமது கல்லூரியிலிருந்து பல்கலைக்கழக அனுமதி பெற்றுப் பொருளாதார வசதியின்மையால் தமது பட்டப்படிப்பைத் தொடரமுடியாமல் அல்லலுறும் 19 மாணவர்களுக்கு (யாழ் பல்கலைக்கழகம் - 12 மாணவர்கள், கிழக்குப் பல்கலைக்கழகம் - 05 மாணவர்கள், கொழும்புப் பல்கலைக்கழகம் - 1, மாணவர். சபரகமுவப் பல்கலைக்கழகம்- 1 மாணவர்) மாதம் ஒன்றுக்கு மாணவர் ஒருவருக்கு தலா 3000.00 ரூபா வீதம் மாதாமாதம் 57, 000.00 ரூபா நிதியுதவியை தற்பொழுது வழங்கி வருவதோடு இத்திட்டம் தொடங்கிய யூன் - 2011 ,லிருந்து யூன் - 2016 வரை மொத்தம் 52, 310.00 டொலர்களை அனுப்பியுதவியிருக்கின்றோம். இத்திட்டத்தின் ஐந்தாவது ஆண்டு நிறைவு விழா உதவி பெறும் மாணவர்களால் அண்மையில் எமது பாடசாலையில் கொண்டாடப்பட்டது.



காலத்தின் கட்டாயமான இச்சீரிய பணியினைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதற்குச் சங்கத்தின் அங்கத்தவர்கள், கல்லூரியின் பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் மற்றும் புலம்பெயர் மண்ணின் வர்த்தகப் பெருமக்கள் அனைவரும் தமது முழுமையான ஆதரவையும் தம்மால் இயன்ற பங்களிப்பையும் நல்குமாறு சங்கத்தின் சார்பில் அன்புரிமையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இத்திட்டம் வெற்றியடைய உதவிய நன்கொடையாளர்கள் அனைவருக்கும் நிர்வாகத்தின் சார்பில் மனமார்ந்த நன்றியையும் பாராட்டையும் பல்கலைக்கழக மாணவர் உதவித் திட்டத்தின் ஐந்தாம் ஆண்டு நிறைவையொட்டிப் பெரு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**செழியன் (தலைவர்) 416-949-7795 மேகவர்ணன் (செயலாளர்) 647-229-4955 சிறீதரன் (பொருளாளர்) 647-588-4301**